# வரையறுத்த கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனி -2018/2019

------------------------------------------------------------------------------------------------------------------------------------

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-----------------------------------------------------------

வரையறுத்த கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2019 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் மற்றும் நட்டம் மற்றும் ஏனைய விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் வரையறுத்த கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனியின் 2019 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 விடயத்தை வலியுறுத்தல்

----------------------------------------------

நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 5 தொடர்பாக உங்களின் கவனம் கோரப்படுவதுடன் அதற்கிணங்க 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக ரூபா 1,817,576,166 தொகையான தேறிய நட்டத்தை அடைந்திருத்தல் மற்றும் அத்திகதியில் கம்பனியின் மொத்த சொத்துக்களை மிகைத்து ரூபா 6,234,978,109 பொறுப்பு உருவாகியுள்ளதனால் கம்பனியின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் நிச்சயமற்றதாகும்.

எவ்வாறாயினும், முகாமைத்துவத்தால் திட்டங்களுடன் முதலீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதன்மூலம் எதிர்காலத்தில் செழிப்பான காசுப் பாய்ச்சலும் இலாபமும் உருவாகும் என முகாமைத்துவம் எதிர்பார்ப்பதுடன் இடம்பெற்றுள்ள நட்டத்தை தீர்த்துக் கொள்வதற்காக பணிப்பாளர் சபையினால் அத்திட்டங்கள் மேற்பார்வை செய்யப்படும். அதற்கிணங்க எதனோல் மின்நிலையத்திற்காக முதலீடு செய்தல் மற்றும் கம்பனியின் தோட்டம்

எதிர்பார்த்த இயலளவு மட்டத்தை அடைவதன் காரணமாக உற்பத்தி மட்டம் அதிகரித்தல் மற்றும் மின்வலு உற்பத்திக்காக புதிய செயற்திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் எதிர்பார்த்த இலாபத்தையும் செழிப்பான காசுப் பாய்ச்சலினையும் உருவாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் கம்பனியினால் தீர்மானம் எடுக்கும் போது காசுப்பாய்ச்சலுக்கு ஏற்படுகின்ற தாக்கம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் பணிப்பாளர்களின் கருத்தாவது கம்பனியின் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லலாம் என்பதாகும்.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியின் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.5 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்புதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக கம்பனியின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கம்பனியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க கம்பனி செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தின் எச்சப் பெறுமதியும் ஆயுட்காலமும் ஒவ்வொரு நிதி ஆண்டும் மீளாய்வு செய்யப்பட்டு காணப்படுகின்ற மதிப்பீடுகளில் வித்தியாசம் காணப்படுமாகயிருந்தால் இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் மதிப்பீட்டு வித்தியாசமாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட மற்றும் தற்பொழுது | முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் ஆயுட்காலத்தை மீண்டும் மதிப்பீடு செய்து அதன் மூலம் ஏற்படுகின்ற ஒட்டு மொத்த தாக்கத்தை 2019/2020 ஆம் ஆண்டிற்கான கணக்குகளுக்கு செம்மையாக்குவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்களின் விளைதரும் ஆயுட் காலத்தை மீள்மதிப்புச் செய்து கணக்குகளில் உள்ளடக்குதல் வேண்டும். |

பயன்படுத்தப்பட்டு வருகின்ற கிரயம் ரூபா 237,335,416 பெறுமதியான இயந்திரங்கள், மனைப் பொருட்கள், வாகனங்கள், விவசாய உபகரணங்கள் என்பன மீண்டும் பெறுமதி செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| கம்பனியின் ஐயக் கடன்களுக்கு ஏற்பாடு செய்யும் கொள்கைகளின் பிரகாரம் கரும்பு பயிர்ச்செய்கை காணிகளைத் தயார்படுத்துவதற்காக வழங்கப்பட்ட கடனுக்காக ரூபா 35,457,048 தொகை மற்றும் ஏனைய விவசாய நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட கடனுக்காக ரூபா 45,405,332 தொகையுமாக கடனுக்காக ரூபா 80,862,380 நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் உரிய கொள்கைகளை கருத்தில் கொள்ளாது கம்பனியால் ஐயக்கடனாக ரூபா 69,635,106 ஒதுக்கீடு செய்யப்பட்டதன் காரணமான ஐயக்கடனுக்கு ஒதுக்கீடு செய்தல் ரூபா 11,227,274 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எங்களின் நிதிஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்யும் நடைமுறையாவது நிறுவனத்தின் பெருந்தோட்ட பிரிவினால் உறுதிப்படுத்தப்பட்ட அறவீடுகளுக்கு உட்பட்டு மத்திய கால கடன்களுக்காக 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதிகளுக்காக, குறுங்கால கடன் மீதிகளுக்காக மற்றும் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதிகளுக்காக என்பனவாறாகும். ஆண்டின் போது நிறுவனத்தின் பெருந்தோட்ட பிரிவினால் காலாவதியான நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் | கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் சரியாக உரிய ஐயக்கடன்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

2019 நவம்பர் மாதம் வரையான நிலுவை மீதிகளில் ரூபா 2,947,155 தொகை தற்பொழுது வரை அறவிடப்பட்டுள்ளது.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 6.5.1 ஆம் பந்தி | நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைபு ஆண்டறிக்கையுடன் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் 05 மாதங்கள் தாமதித்து 2019 ஒக்தோபர் 30 ஆந் திகதி நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் வரைபு ஆண்டறிக்கை | நீண்ட பயிர்ச் செய்கை காலத்தின் காரணமாக (மே இலிருந்து செப்தெம்பர் வரை) விவசாயிகளின் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய உரிய கொடுப்பனவுகளுக்காக கம்பனியின் நிதியை மேலதிகமாக ஈடுபடுத்த வேண்டியிருந்தது. அதன் காரணமாக துணைப் பதிவேடுகள் மற்றும் | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | ஏனைய கணக்காய்வுத் தேவைப்பாடுகளைத் தயாரிக்கும் போது எதிர்பாராத வகையில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. எவ்வாறாயினும், எதிர்பார்த்த வளங்களை அதிகரிப்பதுடன் நாங்கள் அடுத்த வருடத்திற்கான கணக்காய்விற்காக நிதிக்கூற்றுக்களை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியின் போது வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம். | |
| (ii) | 9.3.1 ஆம் பந்தி | ஒவ்வொரு நிறுவனத்திற்குரிய பதவியணியினரை ஆட்சேர்க்கும் நடைமுறை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனிக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்படாது மீளாய்வாண்டின் போது ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இலங்கை அரசாங்கத்திற்கும் கம்பனிக்குமிடையே கையெழுத்திடப்பட்ட முகாமைத்துவ உடன்படிக்கையின் கீழ் தொழில் முயற்சியை முகாமைத்துவம் செய்வதற்காக கல்லோயா ஹோல்டிங் (தனியார்) கம்பனி என்ற பெயரில் ஒரு கம்பனியை தோற்றுவிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எங்களால் முகாமைத்துவ உடன்படிக்கைக்கு இணங்க உள்ளபடியான ஊழியர் | கம்பனிக்காக ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளுதல் அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடை முறையின் பிரகாரம் மேற்கொள்ளப் படுதல் வேண்டும். |

தேவைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படட மதிப்பீடு செய்யப்பட்ட ஊழியர் திட்டத்திற்காக கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனியின் மற்றும் கல்லோயா ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனியின் பணிப்பாளர் சபையின் மூலம் முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

--------------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------------------

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,814,145,920 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 1,347,528,120 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவகளில் ரூபா 466,617,800 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கம்பனி பெற்றுக்கொண்ட கடனுக்காக செலுத்திய வட்டி காரணமாக இருந்தது.

### 2.2 விகிதாசார பகுப்பாய்வு

--------------------------------------------

நடைமுறை விகிதம் முன்னைய ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை 1:0.25 இலிருந்து 1:0.21 ஆக வீழ்ச்சியடைந்திருந்ததுடன் விரைவு விகிதம் 1:0.08 இலிருந்து 1:0.07 வரை குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கம்பனியால் நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட குத்தகை வசதிகளுக்காக மீளாய்வாண்டின் போது செலுத்த வேண்டிய குத்தகை தவணைப் பணத்தை நிர்ணயிக்கப்பட்ட திகதிகளின் போது செலுத்தாமையின் காரணமாக அதற்காக மேலதிக வட்டியாக ரூபா 5,812,203 செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | கம்பனியின் பலவீனமான காசு உட்பாய்ச்சலின் காரணமாக சில குத்தகை தவணைப் பயங்களைச் செலுத்துவதற்கு தாமதமடைந்திருந்தது. உரிய குத்தகை கம்பனிகளின் முகாமைத்துவத்துடன் கலந்துரையாடி இந்த மீதிகளை விடுவிப்பதற்குள்ள இயலுமை தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தி வருகின்றது. | குத்தகை தவணைப் பணங்களை நிர்ணயித்த திகதிகளில் செலுத்தி மேலதிக வட்டி செலுத்துவதனை தவிர்த்துக் கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) கல்லோயா பெருந்தோட்ட தனியார் கம்பனியின் நலன்புரிச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த சீனிக்காக கிடைக்க வேண்டிய 03 ஆண்டுகளுக்கு மேல் காலங்கடந்திருந்த ரூபா 383,000 மீதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நலன்புரி கடைகளினூடாக சீனி விற்பனையை மேம்படுத்தும் குறிக்கோளில் அவர்களால் கிழக்கு மாகாணத்திலுள்ள பாவனையாளர்களுடன் விற்பனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. வாடிக்கையாளர்களால் நலன்புரி கடைகளுக்கு காசோலைகளின் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததும் அந்த அனைத்து காசோலைகளும் கணக்குகளில் போதியளவு | மேலும் பெற வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகளை விரைவாக எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பணம் இல்லாததன் காரணமாக நிராகரிக்கப்பட்டிருந்தன.<br>பின்னர் நலன்புரி கடைகளால் அப் பாவனையாளர்களுக்கு எதிராக அம்பாறை நீதவான் நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டிருந்ததுடன் நீதிமன்ற நடைமுறையினூடாக 2019 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மீதியான ரூபா 422,000 பணத்தில் ரூபா 39,000 பணம் அறவிட வேண்டியிருந்ததுடன் மிகுதிப் பணத் பெற்றுக்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | கம்பனியின் மூலப்பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குபவர்களுக்கு வழங்கப்பட்ட 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையான முறையே ரூபா 3,951,090 மற்றும் ரூபா 2,831,338 தொகைகளான முற்பணங்களை கணக்காய்வுத் திகதி வரை தீர்த்து வைப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வழங்குனரிடம் இருந்ததன் காரணமாக அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு தெரியப்படுத்தியிருந்தும் வழக்கு கிரயத்தின் காரணமாக இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படாததுடன் கல்லோயா பெருந்தோட்டக் கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு இது பற்றி தெரியப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>ஸ்மாட் லயின் நிறுவனத்தினால் சில வேலைப் பகுதிகள் இன்னும் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளதால் நிருவாகப் பிரிவிற்கு இன்வொயிஸ் மற்றும் சேவை பெறுவனவு குறிப்புக்களை (SRN) வழங்குவதற்கு முடியாதிருந்ததனால் | வழங்கப்பட்டுள்ள முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அவர்களிடம் உள்ள முற்பணத்தை செலவாகப் பதிவதற்கு முடியாதுள்ளது.

தெவ்மினி ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடட் நிறுவனத்திற்கு அப்போது வீதிக்கு மட்டமிடல் செயற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எனினும், இன்வொயிஸ் சமர்ப்பிக்கப்படாது அவரினால் அவரது இயந்திரம் அப்புறப் படுத்தப்பட்டிருந்ததுடன் அவரினால் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 154,500 ஆகும்.

லக்ஸ்மன் என்பனவரினால் காணிகளை தயார்படுத்தும் நடவடிக்கைகளுக்காக ஒரு உழவு இயந்திரம் வழங்கப்பட்டதுடன் அதற்கிணங்க வாடகை செலுத்தப்பட்டது. புதிய இயந்திரமாக இருந்தும் அதனைப் பயன்படுத்தும் போது அடிக்கடி செயற்படாமைக்கு உள்ளாகியிருந்தும் செலுத்த வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்காக உழவு இயந்திரம் கம்பனியில் வைத்துக்கொள்ளப்பட்டது.

எஸ்.ஏ.வீரசேகர என்பவர் காணியை தயார்படுத்தும் நடவடிக்கைக்காக ஒரு உழவு இயந்திரம் வழங்கப்பட்டதுடன் அதற்கிணங்க வாடகை செலுத்தப்பட்டது. புதிய

| | | | |
|---|---|---|---|
| | | இயந்திரமாக இருந்த போதிலும் அதனைப் பயன்படுத்தும் போது அடிக்கடி செயற்பட்டமைக்கு உட்பட்டிருந்தது. செலுத்த வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்காக உழவு இயந்திரம் கம்பனியில் வைத்துக்கொள்ளப்பட்டது. | |
| (ஈ) | 2018/2019 கணக்காண்டு வரை கம்பனியின் கரும்பு பயிர் செய்யக்கூடிய காணியின் அளவு 6208 ஹெக்டெயர்களாக இருந்தும் 5999 ஹெக்டெயர்களில் மாத்திரம் கரும்பு பயிர்செய்யப்பட்டிருந்தது. 2018/2019 கணக்காண்டில் ஒரு ஹெக்டயருக்கு சராசரி கரும்பு விளைச்சல் 53 மெட்ரிக் தொன்களாக இருந்ததுடன் கரும்பு செய்யப்படாத 209 ஹெக்டயர்களின் அடிப்படையில் இழக்கப்பட்ட சராசரி கரும்பு விளைச்சல் 11,077 மெட்ரிக் தொன்களாக இருந்தது. அதன் மூலம் 738.6 மெட்ரிக் தொன் சீனி 151,580 லீற்றர் எதனோல் மற்றும் 220.5 மெட்ரிக் தொன் கொம்போஸ்ட் | 2018/2019 ஆம் ஆண்டின் போது கரும்பு செய்யக் கூடிய காணியின் அளவு 6,208 ஹெக்டெயர்களாக இருந்ததுடன் பல சந்தர்ப்பங்களின் போது முகாமைத்துவத்தால் இந்த முழு அளவினையும் பயிர்செய்கை பண்ணுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் விவசாயிகளின் தொடர்ச்சியான எதிர்ப்பு மற்றும் கரும்பு பயிர் செய்யப்பட வேண்டாமென அவர்களால் தொடுக்கப்பட்ட வழக்கின் காரணமாக எங்களால் 208 ஹெக்டெயர்கள் பயிரிடுவதற்கு முடியாதிருந்தது. இந்த நீதிமன்ற வழக்கின் காரணமாக கரும்பு பயிர்செய்கை பண்ணுவதற்காக இக் காணிக்குள் நுழைவதற்கு எங்களுக்கு தடை விதிக்கப் பட்டிருந்தது. அதன் காரணமாக அக்காணிகளில் பயிரிடப்படாமையால் குறிப்பிடப்பட்டிருந்த பரப்பளவில் சீனி, எதனோல் (ENA) | பயிரிடப்படாதுள்ள 209 ஹெக்டயர் காணி கம்பனிக்குச் சொந்தமானது என்பது நீதி மன்றத்தின் மூலம் உறுதிப்படுத்தப் படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உற்பத்தியும் இழக்கப்பட்டிருந்தது. | கொம்போஸ்ட் என்பன கம்பனியால் இழக்கப் பட்டிருந்தது. | |
| (உ) | தொழிற்சாலைக்குத் தேவையான மின் சக்தியானது சீனி உற்பத்தி நடைமுறைகளிலிருந்து வெளியாகின்ற வாயுவின் உதவியுடன் உற்பத்தி செய்யப்படுவதுடன் அது போதியளவில் இல்லாததன் பின்னர் தேசிய நீர்மின் சகத்தியை ஈடுபடுத்தி இயந்திரம் செயற்படுகின்றது. 2014/2015 கணக்காண்டு வரை 3,020 மெகாவோட் ஆன தொழிற்சாலை மின்வலு உற்பத்தியானது 2018/2019 கணக்காண்டளவில் 1,774 மெகாவோட் வரை குறைவடைந்திருந்தது. இதற்காக வருடாந்தம் கரும்பு அளவு குறைவடைந்தமை மற்றும் தொழிற்சாலை செயற்திறனின்மை தாக்கமளித்திருந்தும் உரிய நிலைமை சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. அதன் காரணமாக மாற்று | தொழிற்சாலையின் மின்வலு உற்பத்தியானது பிரதானமாக அரைக்கப்படுகின்ற கரும்பின் அளவின் அடிப்படையில் காணப்படுகின்றது. 2014/15 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018/19 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018/19 ஆம் ஆண்டில் மின்வலு உற்பத்தியானது வீழ்ச்சியடைந்திருந்தது. ஏற்கணவே குறிப்பிடப்பட்டவாறு கரும்பு இனமும் கரும்பு பயிர்செய்கைக்கு பரவியுள்ள நோய் மற்றும் எதிர்பாராத காலநிலை நிலமையின் காரணமாக கரும்பு வழங்கல் வீழ்ச்சியடைந்ததன் அடிப்படையில் அரைக்கப்பட்ட கரும்பின் அளவு வீழ்ச்சியடைந்திருந்தது. தொழிற்சாலையானது 60 ஆண்டுகளுக்கு மேல் பழமையானதாக இருப்பதனால் அடிக்கடி துண்டிப்புக்களுக்கு உள்ளாகியிருந்தது. எவ்வாறாயினும் எங்களால் மின்வலு உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. | வருடாந்தம் கரும்பு அரைக்கும் இயலளவை அதிகரிப்பதன் மூலம் மாற்று மின்வலுவிற்காக மேற்கொள்ளப்படு கின்ற கிரயத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மின்வலுவிற்காக மேலதிக கிரயத்தை கம்பனி மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது.

## 3.2 ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2014/2015 கணக்காண்டளவில் கம்பனியினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடனின் அளவு ரூபா 2,177 மில்லியனாக இருந்ததுடன், அதற்காக செலுத்தப்பட்ட கடன் வட்டி ரூபா 529 மில்லியனாக இருந்ததுடன் அது 2018/2019 கணக்காண்டளவில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடனின் அளவு ரூபா 7400 மில்லியன் வரை 239 சதவீதத்தாலும் செலுத்தப்பட்ட வட்டி ரூபா 1,803 மில்லியன் வரை 240 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தது. கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளைப் பேணுதல் மற்றும் தொழிற்பாட்டு மூலதன தேவையை நிறைவேற்றுவதற்காக அடிக்கடி கடன் பெற்றுக்கொள்ளப்பட்டதன் காரணமாக கம்பனியின் நிதி | 2007 ஆம் ஆண்டில் கல்லோயா பெருந்தோட்ட தனியார் கம்பனி தோற்றுவிக்கப் பட்டிருந்ததும் வணிக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது 2012 ஆம் ஆண்டிலாகும். எவ்வாறாயினும், 2017/2018 ஆம் ஆண்டு வரை கம்பனியின் பிரதான வருமான மூலமாவது காலரீதியாக மாற்றங்களுக்கு இயற்கையாக உட்படுகின்ற சீனி உற்பத்தியாகும். எனவே தொழிற்பாட்டு மூலதன தேவைப்பாடு (சம்பளம் / பயிர் பராமரிப்பு / தொழிற்சாலை பராமரிப்பு / கடல்சார் மேற்பார்வை / நியதிச்சட்ட கொடுப்பனவுகள் முதலியன) மற்றும் மூலதன விரிவுபடுத்தல் செயற்திட்டங்கள் (வடிசாலை / சாம்பல் | அடிக்கடி கடன் பெற்றுக் கொள்வதன் காரணமாக கம்பனியின் சிறப்பற்ற நிதிச் சிக்கல் மேலும் தீவிரமடைவதன் காரணமாக அதனைத் தவிர்த்துக் கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலைமை சிறப்பற்ற நிலைமைக்கு மாறியிருந்தது. அவ்வாறே 2006/2007 கணக்காண்டிலிருந்து கம்பனி நட்டம் அடையும் நிலையைக் கொண்டிருந்ததுடன் 2006/2007 ஆம் ஆண்டில் ரூபா 219 மில்லியனான அந்நட்டம் 2018/2019 கணக்காண்டளவில் ரூபா 1814 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. | பரவுவதனை தவிர்த்தல் (Fly ash control system / சேதனப் பசளை உற்பத்தி முதலியன) என்பவற்றிற்காக பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு கம்பனிக்கு நிதி நிறுவனங்களிடமிருந்து கடனை பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது. வடிசாலை போன்ற புதிய இயலளவு விரிவுபடுத்தல் செயற்திட்டத்துடன் 2018/2019 ஆம் ஆண்டிலிருந்து மேலதிக வருமான வழிகளை உருவாக்குவதற்கு கம்பனிக்கு முடியுமாக இருந்தது. எனவே கம்பனியின் செயற்பாட்டு இலாபம் அதிகரிக்கும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். | |
| (ஆ) | கம்பனியின் உடைந்த பொருட்களை அகற்றும் குறிக்கோளில் 2018 நவம்பர் 15 ஆந் திகதி விலைமனுக்கள் கோரப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட கொள்வனவுகாரர்களுக்கு கேள்விகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த உடைந்த இரும்புகள் பயன்பாட்டிற்கு பொருத்தமான நிலையில் இல்லை எனக் குறிப்பிட்டு கேள்வி ஆவணங்களின் நிபந்தனைகளின் பிரகாரம் | கல்லோயா பெருந்தோட்ட தனியார் கம்பனி கேள்வி நடைமுறைகளுக்கு இணங்கியிருந்தும் சந்தை விலை மாற்றதடைந்ததன் காரணமாக கேள்விதாரர்களால் உடைந்த இரும்புகளை அகற்றுதல் நிராகரிக்கப்பட்டிருந்தது. உடைந்த இரும்புகளை அகற்றுமாறு அடிக்கடி கேள்வி தாரருக்குத் தெரியப்படுத்தியிருந்தும் அதற்காக அவரிடமிருந்து | காலம் எடுத்துள்ளதன் காரணமாக இந்த இரும்புகள் மேலும் துருப்பிடிப்பதனால் பெற்றுக்கொள்ளக் கூடிய வருமானம் குறைவடைவதன் காரணமாக விரைவாக உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு அவற்றினை விற்பனை |

நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் உரிய உடைந்த பொருட்கள் அகற்றப்படாமையின் காரணமாக கேள்வி நடைமுறைகள் வெற்றியளித்திருக்கவில்லை. அவ்வாறே பல ஆண்டுகளாக தொழிற்சாலையில் இலகு உருக்கு, இரும்பு, செம்பு, பித்தளை, துருப்பிடிக்காத உருக்கு என்பன மண்ணில், புதையுண்டிருத்தல், காட்டு ஆபத்துக்கு உட்படுதல் முதலிய நிலைமை ஏற்பட்டிருந்ததுடன் டெங்கு நோய் பரவுவதற்கும் உள்ள வாய்ப்புக்களின் காரணமாக இந்த இரும்புகளை தொழிற்சாலை வளவிலிருந்து அகற்றப்படாமைக்கு எதிராக பிரதேசத்திலுள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் தண்டப்பணம் விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் உரிய காலப் பகுதிக்குள் அப்பொருட்கள் விற்பகப்படாமையின் காரணமாக கம்பனியினால் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த மேலதிக வருமானமும் இழக்கப்பட்டிருந்தது.

சிறப்பான பதில் கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே கேள்விதாரர்களுக்கு மத்தியில் மோசடியான செயற்பாடு இடம்பெற்றுள்ளதுடன் கம்பனியினால் விற்பனைகள் இடைநிறுத்திவைக்கப்பட்டுள் ளது. முகாமைத்துவத்தினால் மதிப்பீட்டினூடாக மீண்டும் அனைத்து இரும்புகளும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் குறுகிய காலத்திற்குள் விற்பனை செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம். இந்த இரும்புகளை விற்பனை செய்வதற்காக பொதுத்திறைசேரி, பணிப்பாளர் சபை, வரிசை அமைச்சு என்பவற்றின் மூலம் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்ததுடன் அதற்காக அதிக காலம் எடுப்பதனால் இந்நடைமுறை தாமதமடைந்துள்ளது.

செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.